

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 04-08-2023

# ராஜபக்சேவும் பா.ஜ.க.வும் - 2

* இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்கள் - போர்க்குற்றங்கள் தொடர்பாக ஐ.நா.மனித உரிமைகள் ஆணையத்தில் பா.ஜ.க. அரசு எடுத்த நிலைப்பாடு என்ன? 2021 ஆம் ஆண்டு நடந்ததை மக்கள் மறந்திருப்பார்கள் என்று அமித்ஷா நினைக்கலாம்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் 46 ஆவது கூட்டத்தொடர் ஜெனீவாவில் நடந்தது. இலங்கை அரசு குறித்தான தீர்மானம் 2021 மார்ச் 23 அன்று வாக்கெடுப்பிற்கு வைக்கப்பட்டது. இந்திய பா.ஜ.க. அரசு தீர்மானத்தினை ஆதரிக்காமல் வாக்கெடுப்பில் பங்கேற்காமல் தவிர்த்தது. போர்க்குற்றம் செய்த இலங்கை அரசைக் காப்பாற்றியது பா.ஜ.க. அரசு. இங்கிலாந்து, கனடா, ஜெர்மனி, வடக்கு மாசிடோனியா, மலாவி மற்றும் மாண்டிநீக்ரோ ஆகிய நாடுகள் இணைந்து இலங்கை அரசு குறித்தான தீர்மானத்தினை முன்வைத்தன.

இந்தியா தீர்மானத்தை ஆதரிக்காமல் வாக்கெடுப்பிலிருந்து வெளியேறியதற்கு இலங்கையின் வெளியுறவுத் துறை அமைச்சர் தினேஷ் குணவர்தனே நன்றி தெரிவித்தார். இந்தியா உள்ளிட்ட நாடுகள் ஜெனீவாவில் காட்டிய ஆதரவை இலங்கை பாராட்டுகிறது என்று தனது சமூக வலைதள பக்கத்தில் குறிப்பிட்டார். இந்தியாவின் நிலைப்பாடு இப்படித்தான் இருக்கும் என்று இலங்கையின் வெளியுறவுத் துறை செயலர் ஜெயநாத் கொலம்பாகே முன்கூட்டியே சொன்னார். 'ஜெனீவாவில் இலங்கைக்கு ஆதரவாக இந்தியா நிற்கும்' என்று உறுதியளித்திருப்பதாக தெரிவித்திருந்தார். இந்நிலையில் தீர்மானத்தினை ஆதரிக்காமல் இந்தியா புறக்கணித்தது, இலங்கைக்கு ஆதரவான நிலைப்பாடாகவே அமைந்திருந்தது.

இலங்கையில் தமிழர்களுக்கு நடைபெற்று வருவது இனப்படுகொலை என்று அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதும், இனப்படுகொலைக்கான சர்வதேச விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்பதுமே தமிழர்களின் கோரிக்கையாக இருந்தது. இதனை ஒன்றிய பா.ஜ.க. அரசு ஆதரிக்கவில்லை. தீர்மானத்தை ஆதரித்து 22 நாடுகள் வாக்களித்தன. பா.ஜ.க. அரசு, இலங்கைத் தமிழர்க்கு ஆதரவான நிலைப்பாட்டை அப்போது எடுக்கவில்லை.

அப்போதே தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இதனைக் கண்டித்தார்கள். **"இலங்கைக்கு ஆதரவாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் இந்தியா வெளிநடப்பு செய்தது உலகத் தமிழர்களுக்கு செய்த பச்சைத் துரோகம். தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தல் நடப்பதால் தான் வெளிநடப்பு செய்திருக்கிறார்கள். இல்லையென்றால் இலங்கைக்கு ஆதரவாகவே வாக்களித்திருப்பார்கள். இதனை தமிழர்கள் மறக்கவோ, மன்னிக்கவோ மாட்டார்கள்"** என்றும் அறிக்கை வெளியிட்டார் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தமிழ்நாட்டின் அனைத்து அரசியல் கட்சிகளும் பா.ஜ.க. அரசின் நிலைப்பாட்டை கடுமையாக எதிர்த்து அறிக்கை வெளியிட்டார்கள். இவை எல்லாம் மறந்து போயிருக்கும் என்று நினைக்கிறார் அமைச்சர் அமித்ஷா.

அதானி குழுமத்துக்கு இலங்கை அரசாங்கம் வர்த்தகச் சலுகைகளைத் தருவதால் அந்த அரசாங்கத்தை பா.ஜ.க. அரசாங்கம் ஆதரிக்கும் என்று இலங்கைத் தமிழ் பத்திரிகையாளர்கள் அப்போது எழுதினார்கள். அதுதான் இறுதியாக நடந்தது. **"தற்போது வேகமெடுக்கும் இலங்கை மீதான ஐ.நா. மனித உரிமை ஆணைய விசாரணையைப் பயன்படுத்தி இலங்கை மீதான தங்களது அரசியல் நலனை அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட நாடுகள் நிறைவேற்றிக் கொள்கின்றன. அதனது சிறு வெளிப்பாடே அதானி குழுமத்திற்கு கொழும்பு மேற்கு கடற்கரை முனையத் திட்டம் கையளிக்கப் பட்டிருப்பதாகும்"** என்று இலங்கை பத்திரிகைகள் (தினக்குரல்) எழுதின. இந்தியாவிலும் எக்கனாமிக் டைம்ஸ், இந்துஸ்தான் டைம்ஸ் இதழ்கள் எழுதின. (24.2.2023)

அதானி குழுமத்தின் எரிசக்தி திட்டங்கள் அடுத்த ஆண்டு டிசம்பருக்குள் முடியும் என்று இலங்கை அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார். வீழ்ச்சியடைந்து வரும் இலங்கைப் பொருளாதாரத்தை மீட்க இப்போது கொழும்பு கவனம் செலுத்தி வருவதாகவும், அதற்கு இந்தியாவின் ஆதரவு முக்கியமானது என்றும், அதானி முதலீடுகள் முக்கியமானது என்றும் இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட கூறினார். ( ஏ.பி.பி. 16.5.2023)

- இவை அனைத்தும் இலங்கைக்கு சார்பாக பா.ஜ.க. அரசு ஏன் நடந்து கொள்கிறது என்பதைக் காட்டும் செய்திகள். இதற்கு விளக்கம் தேவையில்லை. இது தொடர்பாக பேசிய இலங்கை மின் வாரிய தலைவர் ஃபெர்டினாண்டோ, "என்னை அழைத்த இலங்கை அதிபர், மின் திட்டங்களை அதானிக்கு ஒதுக்குங்கள் என இந்திய பிரதமர் மோடி அழுத்தம் கொடுப்பதால் திட்டத்தை அதானி குழுமத்துக்கு ஒதுக்குங்கள் எனக் கூறினார். இதனால் நான் இது தொடர்பாக நிதி அமைச்சகத்துக்கு கடிதம் எழுதினேன்" எனக் கூறினார். இதனால் அதானிக்கு எதிராகவே இலங்கைத் தமிழர்கள் போராட்டம் நடத்தினார்கள். உடனே, 'நான் அப்படிச் சொல்லவில்லை' என்று இலங்கை மின் வாரியத் தலைவர் மறுத்தார். ஆனாலும் கடந்த வாரம் - அதாவது சூலை 21 ஆம் தேதி அன்று டெல்லி வந்த இலங்கை அதிபர் ரணிலை, அதானி சந்தித்துப் பேசினார்.

**"ஜூன் 2022ல் இலங்கை காற்றாலை மின்உற்பத்தி உரிமத்தை அதானிக்கு வழங்க வேண்டும் என மோடி அழுத்தம் கொடுப்பதாக ராஜபக்சே சொன்னார். இதுதான் உங்கள் வெளியுறவுக் கொள்கை. இது இந்திய வெளியுறவுக் கொள்கை அல்ல. அதானியின் வெளியுறவுக்கொள்கை"** - என்று பகிரங்கமாக குற்றச்சாட்டு வைத்தார் ராகுல் காந்தி. இத்தகைய மர்மமான வெளியுறவுக் கொள்கையை வைத்திருக்கும் பா.ஜ.க.வுக்கு இலங்கைப் பிரச்சினையைப் பற்றிப் பேச உரிமை உண்டா?

2014 மே 19 ஆம் தேதி பசில் ராஜபக்சே ஒரு பேட்டி அளித்திருந்தார். அது 'தினமணி' இணைய தளத்தில் இன்றும் இருக்கிறது. **"குஜராத்தில் மோடி நிறைவேற்றிய வாக்குறுதிகளைத் தான் ராஜபக்சே தம் நாட்டு மக்களுக்கு நிறைவேற்றினார். நரேந்திரமோடி தான் வெற்றி பெறுவார் என்று இலங்கை அதிபர் மகிந்த ராஜபக்சே ஏற்கனவே நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருந்தார். அதுவும் தமிழ்நாட்டுக் கட்சிகளை நம்பாமல் நிச்சயம் மோடி தனிப்பெரும் பான்மையுடன் வெற்றி பெற வேண்டும் என்று விரும்பினார். இலங்கையை ஆளும் ராஜபக்சேவின் கட்சிக்கும் நரேந்திரமோடியின் கட்சிக்கும் இடையே பெரிய அளவில் நடைமுறை சித்தாந்தங்களில் வேறுபாடுகள் இருக்காது. காங்கிரஸ் ஆட்சியின் போது உள்நாட்டு அரசியல் தடைகளின் காரணமாக மன்மோகன்சிங் செய்ய முடியாமல் போனவற்றை கூட மோடி செய்து முடிப்பார்"** என்று கூறினார். இதுதான் பசில் ராஜபக்சே சொன்னது ஆகும்.

**இதற்கு மேல் எதுவும் சொல்வதற்கு இல்லை!**

## தமிழகத்தில் மழைக்கு வாய்ப்பு!

சென்னை, ஆக.4-

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், நேற்று வடகிழக்கு வங்கக் கடல் பகுதிகளில் நிலை கொண்ட காற்றழுத்த தாழ்வு மண்டலம் நேற்று முன்தினம் மாலை வங்காளதேசம் கடற்கரையை கடந்தது.

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, 8.8.2023 அன்று வரை: தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னையை பொறுத்தவரை அடுத்த இரு தினங்களுக்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.8.2023) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் 23 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 253 வாகனங்களை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக வழங்கிடும் வகையில் 10 வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்து, வாகனங்களுக்கான சாவிகளை அலுவலர்களிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பா.பொன்னையா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ரூ.23.84 கோடியில் 253

# ஊரக வளர்ச்சி - ஊராட்சித் துறை அலுவலர்களுக்கு வாகனங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஆக. 4-**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.8.2023) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் 23 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 253 வாகனங்களை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக வழங்கிடும் வகையில் 10 வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் 2023-24ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கள அலுவலர்கள், செயல்படுத்தப்படும் பணிகளின் தரத்தை கண்காணிக்கவும், உரிய காலத்தில் முடித்திடுவதை உறுதி செய்யவும் கள ஆய்வு மேற்கொள்ள வேண்டி இருக்கிறது. பணிகளை திறம்பட கண்காணிக்க ஏதுவாக புதிய வாகனங்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பணிகளை திறம்பட கண்காணிக்கும் வகையில், 23 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 253 வாகனங்களை மாவட்ட ஆட்சித் தலைவர்கள், ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர்கள், செயற் பொறியாளர்கள், உதவி செயற் பொறியாளர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உள்ளிட்ட அலுவலர்களின் பயன்பாட்டிற்காக வழங்கிடும் வகையில், அவ்வாகனங்களுக்கான சேவையினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்து, வாகனங்களுக்கான சாவிகளை அலுவலர்களிடம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பி. பொன்னையா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இணையவழி சூதாட்டங்கள்: தற்போதைய சட்டத்திருத்தங்கள்

# மாநில சட்டங்களுக்கு இணக்கமான முறையில் அமைய வேண்டும்!

## ஜி.எஸ்.டி. கூட்டத்தில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு வலியுறுத்தல்!

*சென்னை, ஆக.4-*

*சரக்குகள் மற்றும் சேவைகள் வரிமன்றக் கூட்டத்தில் தமிழ்நாடு இணையவழி சூதாட்ட தடை மற்றும் இணையவழி விளையாட்டுக்கள் ஒழுங்குபடுத்தும் சட்டத்தினை பாதுகாக்க தீவிர நிலைப்பாடு குறித்து நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வலியுறுத்தியுள்ளார்.*

*ஒன்றிய நிதி மற்றும் பெரு நிறுவன விவகாரங்கள் துறை அமைச்சர், சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத் தலைவர், தலைமையில் நேற்று முன்தினம் (02.08.2023) 51 வது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றக் கூட்டம் காணொலிக் காட்சி மூலம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமைச் செயலகத்திலிருந்து இணைய வழியாக கலந்து கொண்டார்கள்.*

*இணையவழி விளையாட்டுக்கள் (Online gaming), சூதாட்ட விடுதிகள் (Casino) மற்றும் குதிரைப் பந்தயம் (Race Course), ஆகியவற்றின் மீது ஜி.எஸ்.டி. வரி விதிப்பது தொடர்பாக சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் மற்றும் விதிகளின் திருத்த வரைவு, கூட்ட நடவடிக்கைப் பொருளாக எடுத்துக் கொள்ளப்பட்டது.*

*தமிழ்நாட்டில், சமீபத்தில் இயற்றப்பட்ட தமிழ்நாடு இணையவழி சூதாட்ட தடை மற்றும் இணையவழி விளையாட்டுக்கள் ஒழுங்குபடுத்தும் சட்டத்தினை கருத்தில் கொண்டு, இக்கூட்டத்தில் முன்மொழியப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் மற்றும் விதிகளின் திருத்த வரைவின் சில கூறுகளுக்கு எதிராக தமிழ்நாடு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் வலிமையான கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டன.*



*இணையவழி சூதாட்டம் (அதாவது) இணையவழி பந்தயம், பணம் அல்லது பிற ஆதாயங்கள் கிடைக்க வாய்ப்புள்ள இணையவழி விளை யாட்டுக்கள் மற்றும் குறிப்பிட்ட வாய்ப்புள்ள இணையவழி விளை யாட்டுக்கள் ஏற்கெனவே தடை செய்யப்பட்டு, தமிழ்நாட்டில் தண்டனைக்குரிய குற்றங்களாக கருதப்படுவதால், தற்போது முன்மொழியப்பட்டுள்ள சட்டத் திருத்தங்களை அத்தகைய மாநில சட்டங்களுக்கு இணக்கமான முறையில் அமைய வேண்டும் என்று தமிழ்நாடு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் வலியுறுத்தப்பட்டது.*

*சட்டம் மற்றும் விதிகளின் திருத்த வரைவில் குறிப்பிட்ட கூறுகளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என தமிழ்நாடு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. இணையவழி பண விளையாட்டுக்கான சட்ட வரையறையில், தற்போது நடைமுறையில் உள்ள எந்தவொரு சட்டம், அல்லது அதன் கீழ் தடைசெய்யப்பட்ட, அல்லது வாய்ப்பின் அடிப்படையில் செயல்திறன் அல்லது விளைவுகள் இருக்கும் விளையாட்டுக்களை கொண்டுவரக்கூடாது என தெரி வித்தார். மேற்கூறிய மாற்றங்கள் முன்மொழி யப் பட்டுள்ள சட்டத்திருத்த வரைவில் சேர்க்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார். தமிழ்நாடு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் சட்டம் மற்றும் விதிகளின் திருத்த வரைவில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ள சரக்குகள் மற்றும் சேவைகள் வரிமன்றத்தால் உறுதியளிக்கப்பட்டது.*

*இக்கூட்டத்தில் அரசு முதன்மை செயலாளர், நிதித் துறை த.உதயசந்திரன், அரசு செயலாளர், வணிக வரி மற்றும் பதிவுத் துறை, திருமதி பா.ஜோதி நிர்மலாசாமி, முதன்மை செயலாளர் / வணிக வரி ஆணையர் தீரஜ் குமார் மற்றும் வணிக வரித் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

### கிராமப்புறங்களிலும் தமிழ்நாடு அரசின் திட்டங்களை கொண்டு சேர்க்கும் வகையில்

# சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார் முதல்வர்!

## திருமயம் ஊராட்சி ஒன்றியத்தில் அமைச்சர் எஸ். ரகுபதி பேச்சு!

*புதுக்கோட்டை, ஆக.4-*

*புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியம், ராங்கியத்தில், புதிய வழித்தட பேருந்து சேவையினை, சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி (01.08.2023) அன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்.*

*அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது:-*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கிராமப்புறங்களிலும் தமிழக அரசின் திட்டங்களை கொண்டு சேர்க்கும் வகையில் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதன்படி ராங்கியம் பகுதியில் உள்ள மாணவ, மாணவிகள் மற்றும் பொது மக்களின் கோரிக்கைக்கிணங்க புதிய வழித்தட பேருந்து சேவை துவக்கி வைக்கப்பட்டுள்ளது.*



*இந்த புதிய வழித்தட பேருந்து சேவையானது, காலை 7.55 மணியளவில் புதுக்கோட்டையிலிருந்து நச்சாந்துப்பட்டி, குழிபிறை, ராங்கியம் மெட்டு வழியாக ராங்கியம் அரசமரம் வரையிலும் மற்றும் காலை 09.10 மணியளவில் ராங்கியம் அரசமரம் பேருந்து நிறுத்தத்திலிருந்து ராங்கியம் மெட்டு, குழிபிறை, நச்சாந்துப்பட்டி வழியாக புதுக்கோட்டை வரையிலும் சென்று வரும். இதன் மூலம் இப்பகுதியில் உள்ள பொதுமக்கள், மாணவ, மாணவிகள் அனைவரும் உரிய நேரத்திற்கு சென்று வர முடியும்.*

*எனவே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இது போன்ற மக்கள் நலத்திட்டங்களை அனைவரும் உரிய முறையில் பெற்று பயனடைய வேண்டும் என அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில், துணை மேலாளர் (வணிகம்) சுப்பு, ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு (எ) சிதம்பரம், ஊராட்சிமன்றத் தலைவர் சாந்தி பொன்னையா, வட்டாட்சியர் புவியரசன், கிளை மேலாளர் (நகர்) பழனிவேல், தொழிலாளர் முன்னேற்ற சங்கம் கிளை செயலாளர் அசோகன், தொழிலாளர் முன்னேற்ற சங்கத் தலைவர் சேகர், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.*



கோயம்புத்தூர் பி.எஸ்.ஜி.சர்வஜன மேல்நிலைப் பள்ளியின் நூற்றாண்டு விழாவை தொடங்கி வைத்த அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கல்வெட்டினைப் பார்வையிட்டார்.